1974 ஏப்ரல் 15]

நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசுக்கு ஒத்துழைக்கவேண்டுமென்று கேட்டு இருக்கிறேன். ஆங்காங்குள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் கருத்துகள் தெரிவித்தபடி, உடனடியாக விசாரணை செய்து, நடவடிக்கை எடுக்கச் செய்துள்ளோம். அதற்கு அடுத்து, சென்சஸ் விதிமுறைப்படி, மத்திய அரசாங்கத்தின் உதவியோடு, இப்படிப்பட்ட சென்சஸ் எனுயுமரேஷன், கே. டி. கே. தங்கமணி சொன்னது போல செய்தோம். அந்த சென்சஸிலும் தவறு இருப்பதாகத் தகவல் வந்து கொண்டிருக்கிறது. இறுதியான பரிகாரம், சர்விஸ் கோவாபரேடிவ் சொசைடீஸ் மூலம் நூல் வழங்குவதற்கு, சட்ட ரீதியாகப் பதிவு செய்திருக்கும் கோவாபரேடிவ்ஸ்க்குக் கொடுப்பது என்று முடிவு எடுத்து செயல்பட்டு வருகிறது.

திரு. பெ. சீனிவாசன் : தலைவரவர்களே, சின்னாளப்பட்டியில் அமுதா டெக்ஸ்டைல்ஸ் என்ற நிறுவனத்திற்குக் கார்டு வழங்கப்பட்டது உண்மையா? அப்படி ஒரு நிறுவனம் இல்லை என்று புகார் வந்திருப்பது உண்மையா? அது குறித்து விசாரணை செய்ய அரசு முயற்சி எடுத்து இருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போது வந்த இந்தத் தகவல் இயக்குனருக்கு அனுப்பப்பட்டு விசாரிக்கப்படும்.

கொடுமுடியில் கூட்டுறவு சர்க்கரை ஆலை

*811 **வினா—திரு. ஏ. எம். இராஜா :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு வட்டத்திலுள்ள கொடுமுடி அருகில் கூட்டுறவுத் துறையில் சர்க்கரை ஆலை ஒன்றை ஏற்படுத்தும் திட்டம் ஏதேனும் ஆய்விலுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) கொடுமுடி ஊராட்சி ஒன்றியத்தின் எல்லைக்குள் கூட்டுறவு சர்க்கரை ஆலை ஒன்றை அமைக்குமாறு மேற்படி ஊராட்சி ஒன்றியம் கேட்டுக்கொண்டுள்ளது. ஏனைய சர்க்கரை ஆலைகளை அமைப்பதற்கான இடங்களைத் தேர்ந்தெடுக்கும்போது இதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவரவர்களே, கொடுமுடி பகுதியில் ஓராண்டில் 11 மாதத்திற்குத் தண்ணீர் இருக்கிறது. நிறைய கரும்பு வளர்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. அமைக்க இருக்கும் சர்க்கரை ஆலையை அந்தப் பகுதியில் அமைக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பரிசீலிக்கப்படும் என்று சொன்னேன்.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, புதிதாகப் பல இடங்களில் சர்க்கரை ஆலை நிறுவ அரசு ஆலோசித்து வருவதாகத் தெரிகிறது. அப்படி ஆரம்பிக்க இருக்கும் சர்க்கரை ஆலைகள் எந்தெந்த இடங்களில் ஆரம்பிக்கப் பட இருக்கின்றன என்பதையும், அப்படி ஆரம்பிக்கப்படும்போது தஞ்சை மாவட்டத்தில் உள்ள மாயவரம் பகுதியில்—நீண்ட நாள் கோரிக்கை இது—இந்த சர்க்கரை ஆலைகளில் ஒன்றை அந்தப் பகுதியில் ஆரம்பிக்க இயலுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: எட்டு சர்க்கரை ஆலைகளைக் கூட்டுறவுத் துறையில் அமைக்க இருக்கிறோம். அந்தச் சர்க்கரை ஆலைகளை எங்கெங்கே அமைக்கவேண்டுமென்று ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவரையும், அந்தந்தப் பகுதியில் இருக்கும் வாய்ப்புக் கூறுகளை ஆராய்ந்து அனுப்புமாறு சொல்லி இருக்கிறோம். சட்டமன்றத்தில் அல்லது சட்டமன்ற உறுப்பினர்கள் அப்படிப் பட்ட யோசனைகளைத் தெரிவித்து இருப்பார்களானால், அவைகளைப் பரிசீலித்து அந்த இடங்களில் இருக்கின்ற வாய்ப்புக்கூறுகளைத் தெரிவிக்க வேண்டுமென்று எழுதியிருக்கிறோம். அந்தக் கருத்துகள் வந்துவிட்ட பின்னாலே தேர்ந் தெடுக்கப்படும்.

திரு. த. சோணையா: தலைவரவர்களே, இப்போது அரசாங்கம் எட்டு கூட்டுறவு சர்க்கரை ஆலைகளை நிறுவ இருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித் தார்கள். அப்படி அமைக்கப்படும் நேரத்தில் கரும்பு அந்தப் பகுதியில் போதிய அளவுக்குக் கிடைக்குமா, மற்ற மற்ற சாத்தியக் கூறுகள் இருக்கின் றனவா என்பதைப் பார்த்து அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அதைப் பற்றி இப்போது சொன்னேன். எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் அதைத்தான் கேட்க விரும்புகிறார்கள். இவைகளைப் பற்றி எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் சொன்ன கருத்து, எழுதிக்கொடுத்த கருத்து ஆகியவை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பப் பட்டு, அந்த இடத்தில் இருக்கும் வாய்ப்புக்கூறுகளை ஆராய்ந்து, பரிசீலித்து அனுப்பச் சொல்லியிருக்கிறோம். அவைகள் வந்த பின்னாலே, பரிசீலித்து முடிவு எடுக்கப்படும்.

திரு. எம். சுரேந்திரன்: சார், சர்க்கரை ஆலைகளாகட்டும் அல்லது வேறு தொழிற்சாலைகளாகட்டும், ஆரம்பிக்கும்போது அப்படி ஆரம்பிப்பதற்கு எம்மாதிரியான அடிப்படை அம்சம் தேவையிருக்கிறது என்பதைப் பற்றி அரசு என்ன கருத்து கொண்டிருக்கிறது. அதோடு அந்த சர்க்கரை ஆலைகளை முக்கியமாக கரும்பு அதிகமாக விளையும் இடங்களில் ஆரம்பிக்கும் முறை இருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கரும்பு கிடைப்பதுதான் முக்கியமாக பரிசீலிக்கப்படுகிறது. அந்தக் குறிப்புகள்தான் இப்போது பெறப்பட்டு வருகின்றன.

திரு. கோவை செழியன் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் குறிப்பிட்ட மாதிரி அந்த இடம் என்னுடைய தொகுதியைச் சேர்ந்த இடம். 2,500 டன் 'கிரஷிங் கபாசிடி' இருக்கவேண்டுமென்றால் 15,000 ஏக்கர் தேவை. எங்கள் பகுதியில் 11 மாதம் தண்ணீர் பாயும். 15,000 ஏக்கருக்கு மேல் இருக்கிறது. எல்.பி.பி. பொறுத்தவரையில் கிட்டத்தட்ட 1 லட்சம் ஏக்கர் இருக்கிறது. பி.ஏ.பி. பொறுத்தவரையில் 30,000 ஏக்கர் இருக்கிறது. 250 நாட்களுக்கு மேல் சப்ளை செய்கிற அளவுக்கு தண்ணீர் வசதி இருக்கிறது. கோவை வேளாண்மைப் பல்கலைக்கழகம் பரிந்துரைப்படி, அந்தத் தகுதிகள் எதுவுமே இல்லாத இடமான கோவையில் நீங்கள் ஆரம்பிப்பதாக இருக்கிறீர்களே, அதை கொடுமுடிக்கு மாற்றுவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்த முடிவு நாங்கள் எடுக்கவில்லை, நாமும் எடுக்கவில்லை. 1967-க்கு முன்னாலே அந்த இடம் தேர்ந்தெடுக்கப் பட்டது. அப்படியிருக்கும்போது மாண்புமிகு அங்கத்தினர் சொன்ன கருத்து, நாம் பரிசீலிக்கும் அந்தக் கருத்துக்கள் எல்லாம் ஏ. எம். இராஜா அவர்கள் அடிக்கடி வலியுறுத்தி அரசுக்குத் தெரிவித்து இருக்கிறார்கள்.

திரு. கே. ரங்கநாதன் : தலைவரவர்களே, சர்க்கரை ஆலை ஏற்கனவே கோவை மாவட்டத்தில் நிறுவ ஆரம்ப வேலைகள் நடைபெற்று நின்று விட்டது. எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாண்புமிகு அங்கத்தினர் அந்தப் பகுதியில் பணம் கொடுப்பதிலே காலதாமதம் ஆனது. அதைப்பற்றி நடவடிக்கை எடுத்து இருக்கிறோம். தண்ணீர் கிடைக்காத நிலை அந்த இடத்தில் இருந்தது. ஓரளவிற்குத் தட்டுப்பாடு அகற்றப்பட்டிருக்கிறது.

Production of Nitric Acid

*812 Q.—THIRU G. R. EDMUND : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether any project in (i) public and (ii) private sector has been set up in Ambattur for the production of Nitric Acid; and

(b) if so, the details thereof?